குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
(Constitutional Rights Education Program)

**குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்வி மன்றம்**
(CRE Community Club for Children)

---

# நெறியாளர்களின் பொறுப்புகளும் கடைமைகளும்

(Facilitator's Duties and Responsibilities)

குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தினை குழந்தைகள் மத்தியில் நேரடியாக செயல்படுத்தும் கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு நெறியாளருக்கும் உள்ளது. மன்றத்தின் செயல்பாடுகளின் போது நெறியாளர் கீழ்காணும் கடமைகளையும் பொறுப்புகளையும் நடைமுறைப்படுத்திட வேண்டும். இதுபோன்ற வரையறைகள் "குழந்தை பாதுகாப்புக் கொள்கை"யை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாக பின்பற்றுவது நெறியாளரின் கடமையாகும்.

**நெறியாளரின் பொறுப்புகளும் கடைமைகளும்:**

1. **அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை முழுமையாக கிராம அளவில் நடைமுறைப்படுத்துதல்:** குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் மூலம் இத்திட்டத்தின் செயல்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுதல். நெறியாளர்கள் தங்கள் அமைப்பின் இயக்குனர் மற்றும் அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் இயக்குனர், மாநில ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்டோரின் வழிகாட்டுதலுக்கிணங்க செயல்படுதல்.
2. **ஆவணப்படுத்துதல் – பதிவேடு பராமரித்தல்:** திட்டம் தொடர்பாக நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வையும் ஆவணப்படுத்தல், பராமரித்தல், தலைமைக்குத் தெரிவித்தல் அவசியம். மன்ற செயல்பாடுகளின் அனைத்து

நடவடிக்கைகளும் முறையாக பதிவேட்டில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். மாநில மையத்தில் இருந்து பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் குறித்து அறிவிப்பு கிடைக்கப் பெறும் போது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மன்றக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் உடனுக்குடன் தங்கள் அமைப்பின் இயக்குநருக்கும் தொடர்பாளருக்கும் தெரிவிக்க வேண்டும்.

3. **மனித உரிமைகள் தினம் அனுசரிப்பு:** மனித உரிமைகள் தொடர்பான முக்கிய நாட்களின் தினங்களை குழந்தைகளோடு அனுசரிக்க வேண்டும். மாநில தலைமையகத்தில் இருந்து அனுசரிக்கப்பட வேண்டிய முக்கிய தினங்கள் குறித்த பட்டியல் பகிரப்படும்.

4. **திறனாய்வுக் கூட்டத்தில் பங்கேற்பு:** ஒவ்வொரு வாரமும் நடைபெறும் .......... மாதமும் 15 நாட்களுக்கு ஒரு முறை நடைபெறும் திறனாய்வுக் கூட்டத்தில் நெறியாளர்கள் பங்கேற்று தங்கள் பணிகளை, அனுபவங்களை, முறையான அறிக்கைகளை பகிர வேண்டும்.

5. **உள்ளூர் தொடர்புகளை பேணுதல்:** தங்கள் மன்றம் செயல்படும் பகுதியில் உள்ள பஞ்சாயத்து தலைவர், வார்டு உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், குடிமைச் சமூக அமைப்புகளின் பொறுப்பாளர்கள், தொழிற்சங்கவாதிகள், சமூக ஆர்வலர்கள், நற்பணி மன்ற தலைவர்கள், மகளிர் சங்க ஊக்குநர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டோருடன் சுமுக தொடர்பில் இருக்க வேண்டும். மன்ற செயல்பாடுகளின் போது இது போன்ற உள்ளூர் பிரபலங்களை அழைக்க வேண்டும்.

6. **மன்ற நிகழ்விற்கு சிறப்பு ஆளுமைகளை அழைத்தல்:** ஒவ்வொரு மன்ற செயல்பாடுகளின் போதும் உள்ளூர் சிறப்பு விருந்தினர்களை அழைத்து அவர்களின் பங்களிப்பை ஆதரவை பெறுதல் வேண்டும். அவர்கள் வருகையின் போது அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் குறித்த

தகவல்களை தெரிவிக்க வேண்டும். அவர்களின் ஒத்துழைப்போடு மன்றத்தின் செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டும்.

7. **குழந்தைகள் மீதான வன்முறைகளை கண்காணித்தல்:** மன்றம் செயல்படும் பகுதிகளில் குழந்தைகள் மீதான வன்முறைகளை கண்காணிக்க வேண்டும். அது குறித்து தங்கள் அமைப்பு ரீதியான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தை உரிமை மீறலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவியாக இருத்தல் வேண்டும்.

8. குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளின் போது பள்ளி, அண்டை சமூகம், குடிமைச் சமூக அமைப்புகள், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே ஓர் ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்துதல் வேண்டும்.

9. குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் மூலம் குழந்தைகளை, “குழந்தை உரிமைக் காப்பாளர்களாக” மாற்றும் பணியை முன்னெடுக்க வேண்டும்.

10. பள்ளி இடைநின்ற குழந்தைகளின் பின்னணியை அறிந்து அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க வேண்டும்.

11. திட்டம் தொடர்பான (அரசியலமைப்பு உரிமைக் கல்வி, நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு) சிறு சிறு அளவிலான களஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

## நம்மிடம் இருக்க வேண்டிய குழந்தை நேய அணுகுமுறை:

1. குழந்தைகளிடம் இயல்பிலேயே படிந்திருக்கும் மனித உரிமை எனும் மதிப்பீடுகளை வெளிக்கொணர்ந்து குழந்தைகளின் மனநிலை, சிந்தனை ஆகியவற்றில் நேர்மறையான மாற்றங்கள் உருவாக முயல வேண்டும்.
2. சாதி, சமய, இன, மொழி, பால், பிறப்பிடம், வர்க்கம், திறன் அடிப்படையில் நிகழும் பாகுபாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தல் வேண்டும்.
3. மன்றத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் அரசியலமைப்பு உரிமைகள் குறித்த அறிவையும் திறனையும் பெறுவதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.
4. குழந்தைகளை மாண்போடும் சமத்துவத்தோடும் வழிநடத்துதல் வேண்டும். குழந்தைகளுடன் தரையில் சரிசமமாக அமர்ந்து (ஆண் / பெண் / மாற்று திறனாளி / மூன்றாம் பாலினம்) பாகுபாடு இல்லாமல் குழந்தைகளுடன் பழக வேண்டும்.
5. ஒவ்வொரு குழந்தையின் உடல், மனம், கல்வி நிலை சார்ந்த தெளிவும் புரிதலும் நெறியாளருக்கு இருக்க வேண்டும். குழந்தைகளின் குடும்ப சூழ்நிலை, கிராம சூழ்நிலை குறித்து தெரிந்து வைத்திருந்தல் நலம்.
6. மன்றத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் குழந்தைகளின் பங்கேற்பினை உறுதிப்படுத்த வேண்டும்.
7. குழந்தைகளுக்கான அரசியலமைப்பு உரிமைக் கல்விப் பாடநூல்கள் அனைத்தையும் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் மிக எளிமையாக குழந்தை நேயப் பண்போடு கற்றுக் கொடுத்திட வேண்டும்.
8. நெறியாளர்கள் அணியும் உடைகள் எளிமையாகவும், கண்ணியமாகவும் இருக்க வேண்டும் (முகம் சுளிக்கும் விதமாக இருக்க கூடாது).
9. நேரம் தவறாமை: குழந்தைகளுக்கான மன்ற செயல்பாடுகளை சரியான நேரத்திற்குத் துவங்கி சரியான நேரத்தில் முடிக்க வேண்டும். ஒருபோதும் குழந்தைகள் காத்திருக்கும் சூழல் நிகழக் கூடாது.

10. குழந்தைகள் முன்பு அடிக்கடி செல்போன் பயன்படுத்துதல் கூடாது. திட்டத்தின் தேவைக்கு மட்டும் குழந்தைகள் அனுமதியுடன் உரிய புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல் அவசியம்.

11. அவசர தேவைக்கு விடுமுறை எடுக்கும் நிலை ஏற்பட்டால் தங்கள் அமைப்பின் இயக்குனர் மற்றும் தொடர்பாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

12. குழந்தைகளை மனிதநேயத்தோடு அனுக வேண்டும். குறிப்பாக அடித்தல், திட்டுதல், கெட்ட வார்த்தைகள் பயன்படுத்துதல், சாதி ரீதியாக மற்றும் பாலின ரீதியாக பாகுபடுத்துதல் போன்றவை கூடாது. குழந்தைகளுக்கு வகுப்பு எடுக்கும் போது, கட்டாயம் பிரம்பு பயன்படுத்தக் கூடாது. பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் குழந்தைகளை தொட்டுப் பேசுதல் கூடாது. ஒரு சில குழந்தைகளுக்கு மட்டும் முக்கியதுவம் கொடுக்கும் போக்கு இருக்கக் கூடாது.

13. குழந்தைகள் கூறும் சந்தேகங்கள், கேள்விகளை பொறுமையாக கேட்க வேண்டும். அதற்கு சரியான பதில் சொல்ல வேண்டும். தங்களுக்கு உரிய பதில் தெரியவில்லை எனில், அடுத்த வகுப்பில் விசாரித்து சொல்வதாக கூற வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் தனித்திறமையை வெளி கொண்டு வரும் ஊக்குநர்களாக நெறியாளர்கள் இருக்க வேண்டும். தங்களின் தனிப்பட்டக் கருத்தை குழந்தைகளிடம் திணிக்கக் கூடாது. குழந்தைகளின் பங்கேற்பிற்கு முக்கியதுவம் அளிக்கப்பட வேண்டும்.